[1983 பிப்ரவரி 8]

(அ) செங்கற்பட்டு மாவட்டம் ஆவடி நகரியத்தில் ஐம்பது படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனை ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன?

(இ) எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ஆம்.

(ஆ) ஆவடியில் புதிய 50 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனை கட்டுவதற்காக 18 ஏக்கர் காலி நிலம் ஒன்றை ஆர்ஜிதம் செய்ய, செங்கை மாவட்ட மருத்துவ அலுவலர் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறார். மேற்படி இடம் கட்டிடம் கட்ட ஏதுவானதா என்பது பற்றி மண் பரிசோதனை செய்யப் பட்டு வருகிறது.

(இ) மேற்கண்ட நிலத்தின் மண் பரிசோதனை முடிவு இன்னும் தெளிவாகவில்லை. இவ்விவரம் கிடைக்கப்பெற்றதும் மருத்துவமனை கட்டுவதற்கான திட்டமும் மதிப்பீடுகளும் தயாரிக்கப்பட்டு அரசு பரிசீலனை செய்யும்.

இலவச மருத்துவ வசதி பெறுவதற்கான வருமான வரம்பை உயர்த்தும் திட்டம்.

* வினா எண் 186—திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு மருத்துவமனைகளில் இலவச மருத்துவ வசதி பெறு வதற்கான வருமான வரம்பை உயர்த்தும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: ஆம்,

திரு. ப. பொன்னுரங்கம்: தலைவரவர்களே, பெரும்பாலான அரசு மருத்துவமனைகளில் சாதாரண வருவாய் உள்ள ஏழைகள் அனுமதிக்கப்படும் நேரத்தில் ஒருவருக்கும் மருந்து முறையாகக் கிடைப்பதில்லை என்ற பெரிய புகார் இருக்கிறது. உதாரண மாக, ஜெனரல் ஹாஸ்பிடலில் எந்தவிதமான மருந்துகளும்....

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். மானியக் கோரிக்கையில் இப்படிப்பட்ட கருத்துக்களைச் சொல்லலாம், அதற்குப் பதில் சொல்வது சரியாக இருக்கும். குறிப்பிட்ட இந்த மூலக் கேள்விக்குத் தொடர்புடைய குறைபாடு களைப் பற்றி மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்பார்களே யானால் அதற்குப் பதில் சொல்லலாம். ஒட்டுமொத்தமாகக் குற்றச்சாட்டைச் சுமத்தினால் அது பெரிய விவாதம் ஆகிவிடும்.

அதற்கு அனுமதி கொடுத்தால் நான் தயாராகவும் இருக்கிறேன். ஆகவே, பேரவைத் தலைவரவர்கள் இதற்கு ஒரு கேட் லைன்ஸ் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்விக்குச் சம்பந்தமில்லாத துணைக் கேள்விகளைக் கேட்கக் கூடாது.

திரு. ப. பொன்னுரங்கம்: இருக்கின்ற குறைகளைக் கூடச் சொல்லக் கூடாதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குறைகள் சொல்லும் நேரமல்ல இது.

New Airports in Tamil Nadu

* Q.No. 187—THIRU S RAJARAMAN: Will the Hon. the Minister for Transport be pleased to state:

(a) the details of the places suggested by the State Government to the Civil Aviation, Ministry of the Government of India for opening of new Airports in this State; and

(b) The reasons for suggesting these places

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) சேலம், தூத்துக்குடி.

(ஆ) தமிழ்நாட்டில் சென்னை, மதுரை, திருச்சி, கோயம்பத்தூர் ஆகிய நான்கு இடங்களில் மட்டும் விமான நிலையங்கள் அமைந்துள்ளன. சேலம்—சென்னைக்கும் இடையிலும், தூத்துக்குடி சென்னைக்கும் இடையிலும் தொழில் வளர்ச்சி, சுற்றுலா பயணிகள் வளர்ச்சி வியாபாரிகளின் போக்குவரத்து வளர்ச்சி பெருகி வருவதால் சேலத்திற்கும், தூத்துக்குடிக்கும் விமானப் போக்குவரத்து அவசியம் என்று கருதப்படுகிறது. மேட்டூர் தொழிற்பேட்டை செல்வதென்றாலும் சேலம் நகரம் வழியாகத்தான் செல்ல வேண்டியுள்ளது. சேலம் எஃகு தொழிற்சாலையும் வளர்ந்து வருகிறது. தூத்துக்குடி துறைமுகம் பெரிய துறைமுகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. மேலும் தூத்துக்குடி—கொழும்புக்கும் இடையே கப்பல் போக்குவரத்து நடத்த கருத்து பரிசிலனையில் உள்ளது. மிகப் பெரிய உரத் தொழிற்சாலையான 'ஸ்பிக்' கடின நீர் சுத்தப்படுத்தும் தொழிற்சாலை மற்றும் தூத்துக்குடி கார இரசாயன உற்பத்தி தொழிற்சாலையும் தூத்துக்குடியில் அமைந்துள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவரவர்களே, சேலத்திலும், தூத்துக்குடியிலும் அமைக்க வேண்டுமென்ற நமது கோரிக்கை நியாயமானது. இது எப்பொழுது வலியுறுத்தப்பட்டது? மத்திய அரசாங்கத்திடமிருந்து எப்பொழுது பதில் வந்தது? இது எப்பொழுது ஆரம்பிக்கப்படும் என்று கூற முடியுமா?